**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: DVC.13/2024**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : தமயந்தி | Caste | : |
| Father 's Name / Husband Name | : பிரவீன்குமார் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ,1 ஆகவும், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் நகல் ம.சா.ஆ. 2 ஆகவும், என்னுடைய ஆதார் அட்டை நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ. 3 ஆகவும், 2ம் மனுதாரர் ரக்சிதா என்பவரின் பிறப்புச் சான்றிதழ் அசல் ம.சா.ஆ.4 ஆகவும், திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் 22.05.2023ம் தேதி கொடுத்த புகார் மனுவிக்கான மனு ஏற்புச் சான்றிதழ் அ.சா.ஆ. 5 ஆகவும், 2ம் மனுதாரரின் பள்ளிப்படிப்பிற்கான பள்ளிக்கட்டண ரசீதுகள் ( எண்ணம் – 9) அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.